# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II , ULUNDURPET

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Code of Criminal Procedure)

**Date : 06.03.2026** **STC NO. 599/2025** **Complainant Witness (PW1)**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சிவமணி | ஆதார் எண் | |
| தந்தை பெயர் | நடேசன் | தொழில் | சுயதொழில் |
| கிராமம் | T.ஒரத்தூர் | வயது | 54 |
| எதிரி ஆஜர். எதிரி வழக்கறிஞர் ஆஜர். | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**முதல் விசாரணை**

நான் T.ஒரத்தூர் கிராமத்தில் வசித்து கோழிப்பண்ணை நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். என்னிடம் காட்டப்படும் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதை நான் தான் செய்தேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அந்த பிரமாண வாக்குமூலத்தை நான் கூற எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது. அதை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன்.

**வாதி ஆதரவாக தாக்கல் செய்யும் வழக்கு ஆவணங்கள்**

1. பு.சா.ஆ.1 - 12.02.2024 தேதியிட்ட Central Bank Of India, மோட்சகுளம் கிளையில் 004136 என்ற எண்ணுள்ள காசோலை.
2. பு.சா.ஆ.2 - மேற்படி காசோலையை புகார்தாரர் களமருதூர் இந்தியன் வங்கியில் 14.02.2024 செலுத்தியதற்கான ரசீது.
3. பு.சா.ஆ.3 - 14.02.2024 தேதியிட்ட களமருதூர் இந்தியன் வங்கி கிளையின் Return Memo.
4. பு.சா.ஆ.4 - 05.03.2024 அன்று நான் எதிரிக்கு அனுப்பிய நோட்டீஸ்.
5. பு.சா.ஆ.5 - 07.03.2024 அன்று நான் அனுப்பிய நோட்டீஸை எதிரி பெற்று கொண்டதற்கான Online Postal Tracking statement.
6. பு.சா.ஆ.6 - 22.03.2024 அன்று எனது வழக்கறிஞர் திரு.ராஜசேகருக்கு எதிரி வழக்கறிஞர் திரு.ராஜேந்திரன் அனுப்பிய பதில் அறிவிப்பு.

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

Sd- Thiru.R.P.Ajieth Singh Raaja
Judicial Magistrate-II,
Ulundurpet.